# மயிலாடுதுறை நீதிபதி வேதநாயகர்
# வாழ்க்கைக் குறிப்பு



தோற்றம்
**11-10-1826**

மறைவு
**21-7-1889**

# நினைவு நூற்றாண்டு விழா வெளியீடு


தமிழ் வளர்ச்சி இயக்ககம்

1990

# வேதநாயகம் பிள்ளை வரலாறு

(அருட்திரு டாக்டர் தனிநாயகம் அடிகளார், எம்.ஏ., எம்.லிட்., எஸ்.டி.டி., பி எச்.டி.)

வேதநாயகம் பிள்ளை திருச்சிராப்பள்ளி நகரை அடுத்த குளத்தூரில் பிறந்து வளர்ந்தவர். அவர் தந்தையார் சவரிமுத்துப் பிள்ளை, தாயார் ஆரோக்கிய மரியம்மாள். இரு திறத்தினரும் முடிசூட்டு வேளாண் மரபில் கொங்குராயர் கோத்திரத்தைச் சேர்ந்தவர். அவர் மரபினர் சைவ சமயத்தில் மிகவும் பற்றுடையவர். கல்வி அறிவு ஒழுக்கம் அமையப் பெற்றவர். பெருநிலக் கிழார். ஆங்கில அரசியல் நிறுவப் பெற்ற காலத்தில், ஆங்கில மொழியில் தேர்ச்சியுற்று, அரசியல் அலுவல் நடத்திய பெருமையுடையவர். ஆவூரில் அமர்ந்து அருள் மறைத் திருச் செய்தி அறிவித்து வந்த இயேசு சபைக் குரவரைத் தமக்கு ஞானாசிரியராகப் பெற்ற பெரும்பேற்றினர். இத்தகைய கத்தோலிக்குப் பெருமரபில் 1826ஆம் ஆண்டில் பிறந்தார். சிறு பருவம் முதலே சமயநெறி தவறாமல் நடந்து வந்தார். பத்து ஆண்டுவரை தமிழ் மொழியே கற்றார். அக்காலத்தில் ஆங்கிலப் பள்ளிகள் நிறுவப் பெற்றில. தம் முயற்சியாய் ஆங்கிலம் கற்றுணர்ந்த பெரியோ ரிடம் சிறுவர் ஆங்கிலம் பயின்றனர். அவ்வாறே இவரும், தியாகப்பிள்ளை என்னும் பெரியோர் பால் ஆங்கிலம் பயின்றார். தியாகப் பிள்ளை நெறி முறை மன்றத்தில் மொழிபெயர்ப்பு அலுவல் பார்த்துக் கொண்டிருந்தார். கல்வி அறிவு ஒழுக்கம் பக்தி சான்றவர். ஆங்கிலம் தமிழ் இரண்டிலும் வல்லவர். தமது மாணாக்கரையும் அவர் அவற்றில்

வல்லுநர் ஆக்கினர். வேதநாயகம் பிள்ளை அன்னையாருடன் பிறந்த பெரிய தாயார் மகன் அடைக்கலம் பிள்ளை அவருக்குப் பள்ளித் தோழர். வேதநாயகம் பிள்ளை சமஸ்கிருதமும் கற்றார். பிரெஞ்சு மொழியும் பயின்றார். இலத்தீன் மொழியும் சிறிது அறிந்தார். தமிழ்ச் செய்யுட் செய்யும் பழக்கம் உண்டாயிற்று. இனிய உரைநடையும் எழுதுபவர்.

தமது 22ஆம் அகவையில் அரசியல் அலுவலில் அமர்ந்தார். அவரது ஆசிரியர் அலுவல் பார்த்த துறையிலேயே அவரது உதவியினால், பத்திரப் பாதுகாவலர் ஆனார். ஆண்டு இரண்டு கழிந்த பின்னர், ஆசிரியர் தமது அலுவலை விட்டு நீங்கியபொழுது, தமக்குப் பின் அந்த அலுவலில் தமது மாணாக்கரையே அமர்த்துமாறு ஏற்பாடு செய்தார். வேதநாயகம் பிள்ளை, தமது ஆசிரியரைப்போலவே, அந்த மொழி பெயர்ப்பு அலுவலை மிகவும் திறம்படச் செய்து வந்தார். சில ஆண்டுகட்குப் பின்னர், ஒன்றன்பின் ஒன்றாக அவருக்குச் சில தீங்குகள் உண்டாயின. குத்திருமல் நோய் வந்தது. பாம்பு தீண்டியது. வண்டி குடை சாய்ந்தது. அலுவலகத்தில் பத்திர சாசனங்கள் சில தவறிப் போயின. பத்திர சாசனங்கள் தவறிப்போன குற்றம் இவருடைய தன்றேனும், இவரது வேலைக்கு இடையூறு நேர்ந்தது. அது பொறாமை கொண்ட பகைவர் செயல். இவற்றினால் மிகவும் வருந்தினார். இயற்கையாய் வந்த தீங்குகளைப் பொறுமையோடு தாங்கினார். பகைவரால் நேர்ந்த தீமையைக் குறித்து இறைவன் பால் முறையிட்டார். அடியார் வேண்டுவன வேண்டுமாறே செய்யவல்ல முழுமுதற் கடவுள், மலைபோல் வந்த கேடுகள் அனைத்தும் பனிபோல் நீங்குமாறு திருவருள் புரிந்தார்.

பின்னர், அரசியலார் மாவட்ட முறைமன்றத் தலைவர் அலுவலுக்காகத் தேர்வு நடத்தினர். அத்தேர்வில் மூவர் தேர்ச்சியுற்றனர். (1) வேதநாயகம் பிள்ளை, (2) முத்துசாமி ஐயர், (3) ரெகுநாதராயர். முதல்வராகிய வேதநாயகம் பிள்ளைக்கு அவ்வலுவல் கிடைத்தது. இவருடன் தேர்ச்சியுற்ற மற்ற இருவரும் இவருக்கு நிகரில ரேனும், அறிவிலும், ஆற்றலிலும் மிகப் பெரியவரே ஆவர். முத்துசாமி ஐயர் பிற்காலத்தில், சென்னை உயர்நிலை நீதிமன்றத்தில் தலைமை நீதிபதி ஆயினர். இரகுநாதராயர் திருவிதாங்கூர் சமஸ்தானத்திற்குத் திவான் ஆயினர். இதனால் அறிவாற்றல்களில் இவருடன் ஒப்பு நோக்குதற்குரியார் எத்தகையர் என்பது அறிதற்பாற்று.

1857 முதல் தரங்கம்பாடியிலும், 1859 முதல் சீர்காழியிலும், 1860 முதல் மாயூரத்திலும்; மாவட்ட முறை மன்றத் தலைவராய் விளங்கினர். நெடுங் காலம் அலுவல் பார்த்த இடம் மாயூரமே. ஆதலின் பிற்காலத்தில் அவர் மாயூரம் வேதநாயகம் பிள்ளை என்றே பெயர் வழங்கப் பெற்றார். பிறந்த இடம் குளத்தூர் ஆயினும், வாழ்ந்த இடம் மாயூரம் ஆயிற்று. நீதி வழங்குதலில் அவருக்கு நிகராவார் எவரும் அக்காலத்தில் இருந்திலர். நீதிமன்றத்தில் நீதி வழங்கும்பொழுது அது வழக்காளிகட்கும் வழக்குரை ஞர்கட்கும் மட்டுமேயன்றி, ஏனையோர்க்கும் பயன் படுமாறு, அத்துடன் தொடர்புடைய அறிவுரையும் அறவுரையும், மறையுரையும் வழங்குவார். அவரது அவைக் களத்தினை வழக்காளிகள் முறைக்களம் என நினைப்பினும், மற்றையோர் கலைக் களமாகவே கருதினர். அவரால் தமிழ்நாட்டின் பண்பு உயர்ந்தது. தமிழ் மக்கள் பலகாலும் அவரது அரிய

பேருரைகளைக் கேட்டு, அவற்றை மிகக் களிப்புடன் பிறர்க்கும் எடுத்துரைத்து, தமக்கும் பிறர்க்கும் பயன்பட வாழ்ந்தனர். பொய், களவு, விபசாரம், வஞ்சனை, கொள்ளை, கொலை முதலாய பலவகைக் குற்றங்கள் குறைந்து போயின. அவரது அரிய குண நலஞ் செயல்கள் தமிழ்நாடு முழுவதிலும் செவி வழி முறையே கதைகளாக வழங்கின. மக்கள் சிலர் அவரை நினைக்கும்போதெல்லாம், அப்பெயர் கேட்கும்போதெல்லாம், இரு கையும் தலைமீது குவித்து, திசை நோக்கி இறைஞ்சுவர். இங்ஙனம், அவர் வாழ்ந்த தமிழ் நாட்டில், குன்றில்மேல் இட்ட விளக்குபோல் ஒளி வீசினர்.

வேதநாயகம் பிள்ளை நிகரற்ற நீதிபதியாக மட்டுமன்றி, தமக்கு உவமை இல்லாத தமிழ்ப் புலவராகவும் திகழ்ந்தமையால், வண்டுகள் தேனை மொய்ப்பதுபோல், தமிழ்ப் பெரும் புலவர்கள் அவரை மொய்த்தனர். அவர்களுள் அவருடன் நெருங்கிப் பழகும் சிறப்புப் பெற்றவர் மிகச் சிலரே ஆவர். அபரகம்பர் எனச் சிறப்புற்ற மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை, திருவாவடுதுறையாதீனப் பண்டாரசன்னதி மேலகரம் சுப்பிரமணிய தேசிகர், திருவருட் பிரகாச வள்ளலார் வடலூர் இராமலிங்க சுவாமிகள், யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலர், யாழ்ப்பாணம் சி. வை. தாமோதரம் பிள்ளை, அட்டாவதானம் பூவைக் கலியாணசுந்தர முதலியார், இசைவாணர் கோபாலகிருஷ்ண பாரதி, அரன்வாயில் வேங்கடசுப்பா பிள்ளை, புதுவை சவரிராயலு நாயக்கர், பாளையங்கோட்டை எச்.ஏ. கிருஷ்ண பிள்ளை முதலானோர் அச்சிறப்புப் பெற்றனர். பிறரெல்லாம் முகில் கண்டு ஆடும் மயில் போலவும், வெயில் கண்டு பாடும் குயில் போலவும் கண்டும், கேட்டும், மகிழ்ந்தும், புகழ்ந்தும், மன நிறைவுற்றனர்.

இப்பேரறிஞரால் தமிழ் நாட்டிற்குற்ற நலங்கள் அளவிறந்தனவேனும் 1876ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாய் மூன்று ஆண்டுகள் நிகழ்ந்த நினைப்பரிய தனிப்பெரும் பஞ்சத்தில் அவர் மக்கள் பசியை ஆற்றிய மாண்புறு செய்கை மலைகளில் மேரு மலைபோல், தனிச் சிறப்பு எய்தியுள்ளது. முதல் ஆண்டு வறட்சியும் இரண்டாம் ஆண்டு வெள்ளமும் மூன்றாம் ஆண்டு விட்டிலும் பஞ்சத்திற்கு காரணமாயின. ஒரு தட்டிலே பொன்னும் ஒரு தட்டிலே நெல்லும் ஒக்க விற்றன. அக்காலம் மக்கள் பட்ட துன்பத்தை இக்காலம் நம்மால் மனத்தால் நினைத்தறிதலும் இயலாது. அக்காலத்தில் அவர், சோழ நாட்டிலுள்ள பெருநிலக் கிழார், பெரும்பொருளாளர், சைவ மடாதிபதிகள் முதலியோர் அளித்த உதவியினாலும் தமது கைப்பொருளினாலும், மாயூரத்திலும் மற்றும் சில ஊர்களிலும், கஞ்சித் தொட்டிகள் நிறுவி, மக்களுயிரைக் காப்பாற்றினார்; அரசியலாளரும் அங்ஙனமே செய்ய ஏவினர். தென்னாட்டுப் பெருமக்கள் சிலரும் அவர் காட்டிய வழியைப் பின்பற்றினர். கத்தோலிக்குத் திருச்சபை மேற்றிராணிமார் வாயிலாப் பாப்பரசருக்குத் தெரிவித்து ஐரோப்பிய நாட்டு பெருமக்கள் உதவியும் கிடைக்கச் செய்தனர். மூன்று ஆண்டுகளிலும் அவர் செய்து வந்த அரிய பெரிய உதவிகளைக் கண்ணுற்று அதுகாறும் மக்கள் எவரையும் பாடாத நோன்பு கொண்டிருந்த மாபெரும் இசைவாணர் கோபால கிருஷ்ண பாரதியார், அதுகாலை தமது வாய் திறந்து, நீயே ''புருஷமேரு'' எனப் புகழ்ந்து பாடத் தொடங்கினரெனின், அவர் புகழின் பெருமை எத்தகையது என எடுத்துக் காட்டவும் வேண்டுமோ?

1873ஆம் ஆண்டு அவர் அரசியல் அலுவல் விட்டு நீங்கியது முதல், தமது இறுதிநாள் வரைக்கும், அவர் பொதுமக்கட்கு ஆற்றிய தொண்டுகள் எத்தன்மை என அறிதற்கு மேலே சொல்லிய செய்தி ஓர் எடுத்துக் காட்டாகும். அவர் மாயூர நகர் மன்றத் தலைவராயிருந்த காலத்தில் கல்வி வளர்ச்சிக்காகப் பெரிதும் உழைத்தார். மகளிர் கல்விப் பயிற்சி பெறும் பொருட்டுச் சிறப்புள்ள ஏற்பாடுகள் செய்தார். வறியோரும் முதியோரும் எழுத்துணருமாறு இராப் பள்ளிகள் நிறுவினார். ஊதியம் கருதாது உழைக்கும் ஆசிரியரையும் தெரிந்தெடுத்தார். பள்ளிகள் அனைத்திலும் பக்தியையும், ஒழுக்கத்தையும் பரப்பினார். மாணாக்கர் தாய் மொழியில் போதிய அறிவு பெறவும், எழுத்துப் பிழை சிறிதுமின்றி எழுதவும், எளிய செய்யுட்களைத் தாமே படித்துப் பொருளுணரவும் பழக்கினார். இசைப் பயிற்சி செய்வித்தார். பெண் பிள்ளைகளுக்கு இல்வாழ்க்கையில் பயன்படும் அறிவனைத்தும் ஊட்டினார். ஆண் பிள்ளைகளை உடலுரமும் உள நலமும் அடையும் வழிகளில் ஊக்கினார். பிள்ளை கல்வி வாயிலாய்ப் பெற்றோரும் நல்லறிவு கிடைக்கப் பெற்றனர். மாயூர மக்கள் அனைவரும் அகம், புறம், இல்லம், தெரு, சுற்றுப் புறம் அனைத்தும் தூயராய் விளங்கினர். நோயும் பேயும் அகன்றன. ஊரிலும், நாட்டிலும், இரவலர் எவரும் இருத்தல் கூடாது என்பது அவரது உட்கோள். அதற்கு அரசியல் ஒத்துழைப்பு இல்லை. அரசியலார் மக்கட்குச் செய்தற்குரிய கடமைகள் அனைத்தையும் எவ்வகை அச்சமுமின்றி, தமது பேருரையாலும் நூலுரையாலும் தெளிவாகச் வெளிப்படுத்தி வந்தார்.

அவர் செய்த எச்செயலும், மக்கள் பயன் அடைதலும், கடவுள் புகழ்பெறுதலுமே குறிக்கோளாக அமைந்துள்ளது. நூல்கள் வெளியிட்ட நோக்கமும் அதுவே. ஆயின், புகழும், பொருளும், ஊக்கமும் உழைப்பும் உடையாரைத் தாமே வலியத் தேடி வந்து அடைகின்றன. 1859ஆம் ஆண்டு நீதி நூல் வெளியாயிற்று. தமிழ் மொழியிலும், ஆங்கில மொழியிலும் தோன்றியுள்ள நீதிகளையும், திருமறை நூலில் கண்ட திட்பமும் நுட்பமுமாய், நீதிகளையும் தமிழ் மக்கள் அனைவரும் கற்றுணருமாறு எளிய இனிய செய்யுட்களில் அமைத்துள்ளார். 1869-ல் பெண்மதிமாலை வெளியிடப்பட்டது. ஆசிரியர், ஆதியில், தம் மக்கட்குச் சிறப்பாக அளித்த அக்கருவூலம், சிறிது காலத்தில், எம்மக்கட்கும் பொதுவாகிவிட்டது. பெண் மக்கள் இளமைப் பருவத்திலும் இல்வாழ்க்கையிலும் கடைப்பிடித்தற்குரிய கடமைகள் அனைத்தும் அதில் நிரம்பியுள்ளன. அதனைப் படிப்போர் இம்மை மறுமைப் பேறுகள் எல்லாம் எய்துவர் என்பது வெறும் புகழ் மொழி அன்று. 1873-ல் திருவருள் மாலை, திருவருள் அந்தாதி, தேவமாதா அந்தாதி, பெரியநாயகியம்மன் பதிகம் முதலிய பக்திப் பனுவல்கள் வெளியாயின. '' உண்டவர்க்கன்றி உட்பசி ஒயுமோ? கண்டவர்க்கன்றி அடங்குமோ? '' என்றனர் தாயுமானவர். அங்ஙனமே, அப்பக்தி வள்ளல் உள்ளத்தில் பெருக்கெடுத்தோடிய பக்தி வெள்ளத்தில் திளைத்த பக்தியாளரே, அப்பனுவல்களின் அருமையும் பெருமையும் உணரவல்லார். 1876-ல் பிரதாப முதலியார் சரித்திரம் தமிழுலகில் தோன்றி, அவருக்கு என்றும் குன்றாப் பெரும் பிரதாபம் நிலைநிறுத்தலாயிற்று. தமிழ்மொழியில் முதன்முதல் தோன்றிய நாவல் என்னும் புதுக்கதை அதுவே. திருக்கோவையார் என்னும் பனுவல் ஒன்றினை ஒருவர்

ஆரணம், காரணம், காமநூல், ஏரணம், இலக்கணம், இலக்கியம் என பலபடப் புனைந்துரைத்தார். இது அறம் பொருள் இன்பம் வீடு எனும் உறுதிப் பொருள் நான்கும் பயக்கும் பெருங்காப்பியமெனவும், பேரிலக்கியமெனவும், பேரின்பக் கதையெனவும் கூறுதல் புனைந்துரை ஆகாது. 1878-ல் சர்வ சமய சமரசக் கீர்த்தனை வெளியாயிற்று. ''பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவி வலவர்'' என்பார் சேக்கிழாரை. ஒரு சமயத்திற்கே சிறப்பாகிய பக்திச் சுவை நனி சொட்டப் பாடிய அவர் திறனும், வேறுபடு சமயம் அனைத்திற்கும் பொதுவாகிய பக்திச் சுவை அனைத்தும் ஒருங்கே நனி சொட்டப் பாடிய இவர் திறனும், அறிஞர் ஆராய்ந்து நோக்கு தற்குரியன. 1887ஆம் ஆண்டு சுகுணசுந்தரி என்னும் புதுக்கதை வெளியிடப்பட்டது. மகளிர்க்குரிய இலக்கணங்கள் அனைத்திற்கும் சுகுணசுந்தரி இலக்கியமாக விளங்குகின்றாள். இந்நூல் மகளிர் நலங்கருதி இயற்றியது. மகளிரை அடிமைப்படுத்திய ஆடவர்க்குத் தவப் பேறின்மையால், அவர்க்குரிய இலக்கணங்கள் அனைத்திற்கும் இலக்கியமாக விளங்கும் சுகுணசுந்தரன் வெளிப்பட்டிலன். 1889-ல் தேவதோத்திரமாலை வெளி வந்தது. இதுவும், 1873-ல் வெளிவந்த பக்திப் பனுவல்களும், பக்தி வளர்ச்சிக்கு உறுதுணையாக விளங்குகின்றன. இவற்றையும், அந்தோனிக்குட்டி அண்ணாவியார் பாடல்களையும், அச்சிட்டுப் பரப்புதல், அரும் பெருஞ் சமயத்தொண்டு ஆகும். சட்டநுட்பங்களையும், தீர்ப்பு நுணுக்கங்களையும், ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழிபெயர்த்து, சுருக்கமும் விளக்கமுமாகத் தொகுத்து வெளியிட்ட 'சித்தாந்த சங்கிரகம்' என்னும் சட்ட நூல், அக்காலத்தில் வக்கீல்களுக்கும், வழக்காளிகளுக்கும், பெருங் கருவூலமாகத் திகழ்ந்தது.

வேதநாயகம் பிள்ளையிடத்து வெளிப்பட்டு, மக்களுயிர்க்கு வழிகாட்டிய அறிவுப் பேரொளி, அவரது உள்ளத்தினின்றும், உயிரினின்றும் ததும்பி வழிந்தோடிய உயிரொளியாகும். அது அவருக்கும் அவர் வாயிலாய்ப் பிறருக்கும் உயிர் அளித்தது. ஆதலின், அதனைக் கடவுள் அருளொளி என்பர். அது பெற்றாரே தமது நல்லொழுக்க மாண்பினால் மக்கட்கு வழிகாட்டுதற்குரியார். அவர் கூறிய அறிவுரைக்கும், அவர் ஒழுகிய ஒழுக்கத் திறனுக்கும், எவரும் வேறுபாடு கண்டிலர். ஒவ்வொரு செயலும் ஓர் ஒழுங்கின்படியே செய்வர். வைகறையில் எழுந்தது முதல், இரவில் துயில் கொள்ளும்வரை, தாம் செய்யவேண்டிய அலுவல்கள் அனைத்திற்கும் அட்டவணை வைத்திருப்பர். அந்த பொது அட்டவணையுள், அன்றன்று இல்லத்திலும், அலுவலகத்திலும், ஊரிலும் செய்ய வேண்டிய அலுவல்களுக்குச் சிறப்பு அட்டவணை வகுத்துக் கொள்வர். வைகறைப் பொழுதிலும், மாலைப் பொழுதிலும், கோவிலிலும், இல்லத்திலும் நடத்தும் இறை வழிபாடு முதலாய சமயக் கடன்களை மிகவும் ஒழுங்காக நிறைவேற்றுவார். தம்மைப் போலவே, தம் மக்களும், பணியாளரும், அவைகளை நிறைவேற்று மாறு தூண்டி வருவார். எப்பொழுதும் கடவுள் நினைவாகவே இருப்பார். அலுவல் மிகுதியால் இறைவனை நினைக்கப் போதிய நேரம் இல்லை என உணர்வார். "நினைப்பதெப்போது நெஞ்சே!—ஐயன் பாதத்தை—நினைப்பதெப்போது நெஞ்சே!" என மனமுருகிப் பாடும் வகையினால் அதனை அறியலாம். இத்தகைய ஒப்புயர்வற்ற பழக்க வழக்கங்கள் அவருக்கு இறுதி வேளையில் உறுதுணை ஆயின. "நீதிமான் மரிப்பதுபோல் நான் மரிப்பேனாக. என்முடிவு அவன் முடிவு

போல் இருப்பதாக'' எனப் பல்லாயிரம் ஆண்டு கட்கு முன்னர் பக்தர் வேண்டினார். நாம் இப்பெரியாரைச் சுட்டி வேண்டுதல் செய்தற்குரிய நல்ல வழியை இவர் நமக்குக் காட்டியுள்ளார். அவர் இத்துணை உயர்ந்த புதுக்கருத்துக்களையும், நீதிகளையும், தமிழ் இலக்கியத்திற்கு நல்கி அதனை வளம்பெறச் செய்தற்குக் காரணமாக இருந்தவை அவருடைய கத்தோலிக்குக் கொள்கைகளும், திருச் சபையின் தேவத்திரவிய அனுமான வாழ்க்கையுமே. கடவுளன்னைபால் அவர் கொண்டிருந்த அளப்பரும் பக்திக்கு, அவர் பாடிய தேவமாதா அந்தாதி, பெரிய நாயகியம்மன் பதிகம் முதலாய பனுவல்களே சான்றாவன. அவரது உள்ளத்தின் நிறைவு பாடல்கள் வாயிலாய் வெளிப்பட்டது. கலைஞர், அறிஞர் அனைவரும், எத்துணைக்குத் திருச்சபையின் தேவத்திரவிய அனுமான வாழ்க்கையில் ஈடுபடு கின்றனரோ, அத்துணைக்குக் கலைகளில் புத்துணர்ச்சி களை வளர்ப்பவர் ஆவர்.

தமிழ் நாடு அரசு மத்திய அச்சகம், சென்னை-600 079.